# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 21.07.2025**

**அசல் வழக்கு எண். 243/2016**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1,2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளான சக்திவேல் மற்றும் ராமச்சந்திரன் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தின் தென்வடல் மற்றும் கிழமேல் விஸ்தீரணம் எனக்கு எவ்வளவு என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு தபசில் சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 2 வீடுகள் உள்ளன. தெருவிற்கு தென்புறத்தில் உள்ள முதல்வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றால் எனது அண்ணன் சக்திவேல் குடியிருந்து வருகிறார். எனது அண்ணன் சக்திவேலின் மேற்படி வீட்டிற்கான கிழமேல் தென்வடல் விஸ்தீரணம் எனக்கு எவ்வளவு என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் குடியிருக்கும் எனது வீட்டின் கிழமேல் தென்வடல் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அண்ணன் மற்றும் எனது வீட்டிற்கு தெற்குபுறத்தில் உள்ள காலிமனையின் கிழமேல் தென்வடல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2. எனது அண்ணன் குடியிருந்து வரும் வீடு, நான் குடியிருந்து வரும் வீடு மற்றும் மேற்படி வீடுகளுக்கு தெற்குபுறத்தில் உள்ள காலிமனை ஆகியவற்றை எனது தந்தை கிரையம் மூலம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி இடங்கள் சரிபாதியாக 3ல் 1 பங்கு உள்ளவை என்றால் சரிதான். 3ல் 2 பங்குகளில் மேற்படி 2 வீடுகள் கட்டப்பட்டு மீதம் 3ல் 1 பங்கு காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2வீடுகளும் எந்த வருடம் கட்டப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வீடுகள் பொறுத்து எனது தந்தை சுப்பையாமுதலியார் பெயரில் எக்காலத்திலும்

வரிவிதிப்பு ஏற்பட்டதில்லை என்றால் சரிதான். மேற்படி 2 வீடுகளை கட்டுவதற்கு எனது தந்தை நகராட்சியில் வரைபட ஒப்புதல் ஏதேனும் பெற்றாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு திருமணமாகி 14 வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணமாகி எந்த ஊருக்கு சென்றேன் என்றால் சிந்தாமணி என்ற ஊருக்கு சென்றேன். எனது கணவர் பெயர் ஈஸ்வரன். எனது கணவர் ஈஸ்வரனுக்கு சிந்தாமணி கிராமத்தில் வீடு உண்டா என்றால் உண்டு. தற்போது எனது கணவர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் எப்படி இறந்தார் என்றால் சிந்தாமணி கிராமத்தில் வைத்து செருப்பு தட்டி கீழே விழுந்தார். எனது கணவர் இறக்குவரையில் நாங்கள் சிந்தாமணி கிராமத்தில்தான் இருந்தோம் என்றால் சரிதான். நான் தற்போது குடியிருக்கும் வீட்டின் வரிவிதிப்பு யார் பெயரில் உள்ளது என்றால் 4 ம் பிரதிவாதி ராஜநாயகம் பெயரில் உள்ளது. ஆனால் மேற்படி வரிவிதிப்பிற்கு நான்தான் தீர்வை செலுத்தி வருகிறேன். எவ்வளவு காலங்களாக எனது வீட்டிற்கு நான் மேற்படி தீர்வை செலுத்திவருகிறேன் என்றால் எனது அப்பா இறந்த காலத்திலிருந்து நான் தீர்வை செலுத்தி வருகிறேன்.

4. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் குடியிருக்கும் வீடு பொறுத்து நான் செலுத்திய தீர்வை ரசீதுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சக்திவேல் குடியிருந்து வரும் வீட்டிற்கு தீர்வை சக்திவேல் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். சக்திவேல் குடியிருந்து வரும் வீட்டிற்கு தீர்வை ரசீது அந்த வீடு கட்டப்பட்டதிலிருந்து அவர்பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் மின்சார இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் 4 ம் பிரதிவாதி ராஜநாயகம் பெயரில் உள்ளது. ஆனால் நான் குடியிருக்கும் வீட்டின் மின்சார கட்டணத்தை நான்தான் செலுத்தி வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டின் வரிவிதிப்பு மற்றும் மின்சார இணைப்பு 4 ம் பிரதிவாதி ராஜநாயகத்தின்

பெயரில் அவர் கிரையம் பெற்ற காலத்திலிருந்து இருந்து வருகிறது என்றால் சரிதான். 2011ம் வருடம் 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய காலத்திலிருந்து நான் குடியிருந்து வரும் வீட்டின் மின்இணைப்பு மற்றும் வரிவிதிப்பு அவர் பெயரில் இருப்பது தெரிந்தே நான் அதற்கான தீர்வைகளை செலுத்திவந்தேனா என்றால் 4ம் பிரதிவாதி பெயரில் மேற்படி மின்இணைப்பு மற்றும் வரிவிதிப்பு உள்ளது பற்றிய விபரம் எனக்கு 4ம் பிரதிவாதி என்னிடம் தகராறு செய்யும்போதுதான் தெரியவந்தது. 4ம் பிரதிவாதி என்னிடம் எப்போது தகராறு செய்தார் என்றால் அவர் கிரையம் வாங்கி ஒரு வாரம் கழித்து தகராறு செய்தார்.

5. நானும், எனது சகோதரர்களும் மொத்தம் 3 நபர்கள் உடன்பிறந்தர்கள் என்றால் சரிதான். நான் எனது சகோதரர்களிடம் தபசில் சொத்தில் உள்ள பங்குகள் குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன். சக்திவேல் எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்தில் அவருக்கு ஒதுக்கப்பட்ட பங்கு பொறுத்து வீடுகட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வீட்டை சக்திவேல் எவ்வளவு செலவு செய்து கட்டினார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வீட்டை சக்திவேல் கட்டிய விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சக்திவேல் எனது வீட்டிற்கு வடபுறத்தில் உள்ள வீட்டை கட்டி அதற்கான மின்இணைப்பை அவர் பெயரில் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான்.

6. எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்தில் சக்திவேல் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர் அவர்களது பங்கு பொறுத்து வாய்மொழியாக பிரித்துக்கொண்டு அவ்வாறு பிரிக்கப்பட்ட தனது பங்கில் சக்திவேல் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை எனது சகோதரர்களுக்கு இடையில் நடைபெற்றபோது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. எனது சகோதரர்கள் இருவரும் சுப்புலாபுரத்தில் ராஜநாயகம் முன்னிலையில் மேறப்டி வாய்மொழி பாகபிரிவினை செய்துகொண்டனர். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்று 20 வருடங்கள் இருக்கும்

என்றால் சரிதான். எனக்கு மேற்படி பாகப்பிரிவினை நடைபெற்றகாலத்தில் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பாகபிரிவினைக்கு பிறகுதான் சக்திவேல் எனது வீட்டிற்கு வடக்குபக்கத்தில் உள்ள அவரது வீட்டை கட்டினார் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை எனது சகோதரர்களுக்கு இடையில் நடக்கும்போது எனது தந்தை உயிருடன் இல்லை என்றால் சரிதான். சக்திவேல் அவரது வீட்டை தனது சுயசம்பாத்தியத்தில் கட்டினாரா என்றால் சக்திவேல் தற்போது அந்த வீடு உள்ள இடத்தை ராமையாவிடம் அடமானம் வைத்து தொகை பெற்று அவரது வீட்டை கட்டினார். மேற்படி ராமையாவிடம் தான் பெற்ற அடமானத் தொகையை சக்திவேல்தான் திரும்ப செலுத்தினார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

7. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டபிறகு நான் மற்றும் எனது அண்ணன் குடியிருந்து வரும் வீட்டிற்கு தென்புறம் உள்ள காலிமனை எனக்கு ஒதுக்கப்பட்ட பங்காக எனது சகோதரர்கள் என்னிடம் கூறினார்களா என்றால் இல்லை. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்ட சமயத்தில் தபசில் சொத்து காலிமனையாக இருந்தது என்றாலும், அதில்வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகுதான் வீடுகள் கட்டப்பட்டது என்றாலும் சரியல்ல. எனது தந்தை வாங்கிய கிரைய சொத்தில் அவரால் ஏற்கனவே இரண்டு வீடுகள் அவர் இறப்பிற்கு முன்பு கட்டப்பட்டன. தபசில் சொத்தில் எனது தந்தை எந்த வீடும் கட்டவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. எனது அண்ணன் சக்திவேல் குடியிருந்து வரும் வீட்டை அவர் கட்டினார் என்றாலும், நான் தற்போது குடியிருந்து வரும் வீட்டை எனது சகோதரர் ராமச்சந்திரன் கட்டினார் என்றாலும் சரியல்ல. மேற்படி இரண்டு வீடுகளும் என் தந்தையால் கட்டப்பட்டன. ராமச்சந்திரன் கட்டிய வீட்டைத்தான் 4ம் பிரதிவாதி ராஜநாயகத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது சகோதரர்கள் சுப்புலாபுரத்தில் செய்துகொண்ட

வாய்மொழி பாகப்பிரிவினை தொடர்பாக அவர்களுக்கு இடையில் கைத்தடி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கைத்தடி ஆவணத்தின் மூலமாக எதிர்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தபசில் சொத்து 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அனுபவித்து அவர்தான் வீடு கட்டினார் என்றால் சரியல்ல. மேற்படி எதிர்கோரிக்கையில் உள்ள தபசில் சொத்தை தனது மகளை பராமரிப்பதற்கு பணம் வேண்டி 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடம் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதிகளின் அனுமதியின்பேரில்தான் தபசில் சொத்தில் உள்ள வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

9. நான் மற்றும் எனது அண்ணன் சக்திவேல் குடியிருந்து வரும் வீட்டிற்கு தென்புறம் உள்ள காலிமனையை நான்தான் பயன்படுத்தி வருகிறனே் என்றால் சரிதான். மேற்படி காலிமனையை எனது அண்ணன் சக்திவேல் பயன்படுத்தியது இல்லை என்றால் சரிதான். மேற்படி காலிமனையை நான் அனுபவித்து வருவதில் பிரதிவாதிகள் எந்த இடையூறும் செய்ததில்லை என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை தபசில் சொத்து வீட்டின் வரிவிதிப்பு மற்றும் மின்கட்டண தீர்வைகளை 4ம் பிரதிவாதியின் அனுமதியின்பேரில்தான் நான் செலுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

10. 21.11.2016ம் தேதியில் தபசில் சொத்து வீட்டை பொறுத்து எனக்கு வழங்கப்பட்ட அனுமதியை 4ம் பிரதிவாதி ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியிடம் நான் வேறு வீடு பார்த்து சென்றுவிடுவதாக கூறிவிட்டு தற்போது இவ்வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்து வீட்டின் தீர்வை ரசீதுகள் மற்றும் மின்கட்டண ரசீதுகள் 4ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளதால் மேற்படி ரசீதுகள் மூலம் மேற்படி வீட்டில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. மேற்படி வீட்டின் தீர்வை ரசீதுகள் மற்றும் மின்கட்டண ரசீதுகள் 4ம்

பிரதிவாதியின் பெயரில் அவர் அனுமதியின்பேரில் நான் கட்டியதால் எனக்கு மேற்படி வீடு தொடர்பாக எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சக்திவேலின் வீட்டை நான் அனுபவம் செய்ததில்லை என்றால் சரிதான்.

11. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணமான எனது வாக்காளர் அடையாள அட்டை எந்த ஆண்டு என்னால் பெறப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 3 மற்றும் வா.சா.ஆ.9 ஆதார் அட்டைகள் தபசில் சொத்துவீடு பொறுத்து எனக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் உள்ள தபசில் சொத்து 4ம் பிரதிவாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் உள்ள தபசில் சொத்திற்கு சொத்து பொறுத்து 4ம் பிரதிவாதி எனக்கு அளித்த அனுமதியை ரத்து செய்ததால் மேற்படி தபசில் சொத்தை நான் காலி செய்து சுவாதீனத்தை 4ம் பிரதிவாதியிடம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகபிரிவினை செய்யப்பட்ட சொத்துக்களை பொறுத்து நான் தற்போது பாகப்பிரிவினை கோருவது தவறு என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், சரியல்ல. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**ம.வி.இல்லை.**